# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 169/நகராட்சி/2018**

**நாள் : 31/07/2018**

**திரு மா. சந்தானமுத்து,**
**விருது நகர்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**விருதுநகர்.** – **எதிர் மனுதாரர்**

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் நகராட்சி, எண்.132/F12, காந்தி நகர் முகவரியில் வசிக்கும் திரு மா. சந்தானமுத்து அவர்களின் 24.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.07.2018 அன்று பெறப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் நகராட்சி, எண்.132/F12, காந்தி நகர் முகவரியில் வசிக்கும் திரு மா. சந்தானமுத்து என்பவர், தான் கடந்த 25 ஆண்டுகளாக குழாய் திருப்புனர் பணியிடத்தில் பணியாற்றி வருவதாகவும், தற்பொழுது விருதுநகர் நகராட்சியில் காலியாக உள்ள குழாய் பொருத்துநர் நிலை – II பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கிட ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7 ( i )–இன் கீழ் பொதுப்பணியாளர் அல்லது உள்ளாட்சி அமைப்பொன்று ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளதென இம்முறைமன்ற நடுவத்திடம் வந்திருக்கின்ற முறையீடு எதனையும் மட்டுமே இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை மேற்கொள்ள இயலும். முறையீட்டு மனுதாரரின் முறையீடு பணியமைப்பு சம்பந்தப்பட்டுள்ளதாலும், தனியருக்கு பிற தீர்வுகள் கிடைக்கத்தக்கதாக இருக்கும்போது மற்றும் வழக்கின் சூழ்நிலைகளின் நோக்கில் அத்தகைய தீர்வுகளைப் பெறுவது அவருக்கு அதிகப்படியான நலனைத் தரக்கூடியதாக இருக்கும்

என இம்முறைமன்ற நடுவம் கருதுவதால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(4) (c)ன் கீழ் இம் மனு இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு உகந்ததல்ல என முடிவு செய்யப்பட்டு, இதுகுறித்து மனுதாரர் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு முறையீடு செய்து கொள்ளலாம் என அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 31–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு எம். சந்தானமுத்து,
எண்.132/F12, காந்தி நகர்,
கங்கா பவுண்டரி அருகில்,
புல்லலக்கோட்டை சாலை,
விருதுநகர் – 626 001.

2. நகராட்சி ஆணையர்,
விருதுநகர் நகராட்சி,
விருதுநகர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி